பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.

கடித எண்.3835/பக.5(1)/2024-1, நாள். 29.04.2024.

அனுப்புநர்
திரு.ஜெ.குமரகுருபரன்,இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.

ஐயா,

பொருள் : பள்ளிக் கல்வி – பொது மாறுதல் கலந்தாய்வு அரசாணை வெளியிடப்பட்டமை – 2024-25 ஆம் ஆண்டுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு – மே 2024 மாதம் தொடங்கி நடத்திட அனுமதி வழங்கக் கோருதல் - தொடர்பாக.

பார்வை
1 அரசாணை (நிலை) எண். 176, பள்ளிக் கல்வி (பக5(1))த்துறை, நாள். 17.12.2021
2 அரசாணை (நிலை) எண். 12, பள்ளிக் கல்வி (பக5(1))த்துறை, நாள். 03.02.2022
3 அரசாணை (நிலை) எண். 15, பள்ளிக் கல்வி (பக5(1))த்துறை, நாள். 10.02.2022
4 அரசாணை (நிலை) எண். 94, பள்ளிக் கல்வி (பக5(1))த்துறை, நாள். 24.06.2023
5 அரசாணை (நிலை) எண்.26, பள்ளிக் கல்வித் பக5(1)த்துறை, நாள் 24.01.2024
6 அரசாணை (நிலை) எண்.48, பள்ளிக் கல்வித் பக5(1)த்துறை, நாள் 21.02.2024
7 பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் நக.எண். 17929/அ1/இ4/2023, நாள் 25.04.2024

----------

மேலே 7இல் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் 25.04.2024 நாளிட்ட கடிதத்தில், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஊராட்சி ஒன்றிய / நகராட்சி/ அரசுதொடக்க / நடுநிலைப்பள்ளிகள் மற்றும் அரசு / நகராட்சி, உயர்/ மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல் குறித்து நெறிமுறைகள் வகுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது என்றும், மேலும் அவ்வரசாணையின் பத்தி 7 (1) (b)யில் கீழ்க்காணுமாறு ஆணையிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

Padasalai.Net

7 (1) GENERAL CONDITIONS

NP (b) The counselling shall be done either during the month of May or at the end of the first or second term. No transfer counselling will be done during academic sessions. In case of counselling in the month of May, the places of the teachers due for retirement in the month of May shall also be shown as vacancies. Those who are due for retirement in the month of May, shall be eligible to take one of the existing vacancies alone and not a notional vacancy as on the date of counselling, in case of promotion. The post in which a teacher is on unauthorised absence for more than one month, will be treated as vacant and made available for counselling.

மேலும், 2022-23 ஆம் ஆண்டிற்கான பொதுமாறுதல் / பணிநிரவல் கலந்தாய்வுகள் 04.03.2023 முதல் 16.04.2023 வரையிலான தேதிகளிலும், 2023-2024 ஆம் ஆண்டிற்கான பொதுமாறுதல் / பணிநிரவல்கலந்தாய்வுகள் 08.05.2023 முதல் 12.06.2023 வரையிலான தேதிகளிலும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது என்றும், 2024-2025 ஆம் ஆண்டிற்கான, பொதுமாறுதல் கலந்தாய்வு தொடர்பான பணிகளை மே 2024 மாதத்தில் தொடங்கி நடத்தி முடிக்கப்படவேண்டியுள்ளது என்றும், பொதுமாறுதல் / பணிநிரவல் கலந்தாய்வு தொடர்பாக கீழ்க்காணும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. இந்நிலையில், மக்களவைப் பொதுத் தேர்தல் 2024 தொடர்பாக தேர்தல் நன்னடத்தை விதிகள் 16.03.2024 முதல் அமலுக்கு வந்துள்ளது. மாநிலத்தில் மக்களவைத் தேர்தல் முதற்கட்டமாக 19.04.2024ல் முடிவுற்றிருப்பினும், ஜூன் 2024 முதல் வாரம் வரை தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளது. மேலும், ஊராட்சிஒன்றிய / நகராட்சி, தொடக்க / நடுநிலைப்பள்ளிகள் மற்றும் அரசு / நகராட்சி, உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல், பணிநிரவல் குறித்தானபணிகள் அனைத்தையும் 2024 -2025 ஆம் கல்வியாண்டில் பள்ளிகள் திறப்பதற்கு முன் பாகமே 2024 மாதம்தொடங்கி,நடத்தி முடிப்பது, மாணவர்களுக்கு கற்றல் - கற்பித்தல் பணிகளில் எவ்வித இடையூறுகள் இன்றி, பள்ளி திறக்கும் நாள் முதலே காலதாமதமின்றி கற்றல் - கற்பித்தல் பணிகளை தொடர ஏதுவாக அமையும் என்றும், அவ்வாறே மாறுதல் பெரும் ஆசிரியர்கள் தங்களது குழந்தைகளை, தங்களது புதிய பணியிடத்திற்கு அருகாமைபள்ளிகளில் சேர்ப்பது உள்ளிட்டவற்றிற்கும் உகந்ததாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், தற்போது மக்களைவத் தேர்தல் 2024 நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால், 2024-2025ஆம் ஆண்டிற்கான பொதுமாறுதல் / பணிநிரவல் கலந்தாய்வு, தொடர்பான ஆயத்தப்பணிகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் பின்வருமாறு 13.05.2024 முதல் 30.06.2024 வரை தொடர்ந்து நடத்திட அனுமதியை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், கலந்தாய்வில், கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்களுக்கு தேர்தல் நன்னடத்தை விதிகள் முடிவுக்கு வந்த பின்னர், மாறுதல் / பணிநிரவல் ஆணைகளை வழங்கி, புதிய பணியிடத்தில் பணியேற்கும் வகையில் பணிவிடுவிப்பு செய்ய உரிய அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுகொண்டள்ளார்.

Padasalai.Net

4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை ஏற்று, மேலே 5 மற்றும் 6ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் முறையே பத்தி 3 மற்றும் பத்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றி, இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ளவாறு 2024-2025ஆம் ஆண்டிற்கான பொது மாறுதல் / பணி நிரவல் கலந்தாய்வு தொடர்பான ஆயத்தப் பணிகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் 13.05.2024 முதல் 30.06.2024 வரை தொடர்ந்து நடத்திடவும், மேலும் பொது மாறுதல் / பணிநிரவல் கலந்தாய்வு பணிகளை மேற்கொண்டு மாறுதல் / பணிநிரவல் கலந்தாய்வில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்களுக்கு 2024ஆம் ஆண்டு மக்களைவத் தேர்தல் நடத்தை விதிகள் விலக்கிக் கொள்ளப்பட்டவுடன் பணி விடுவிப்பு செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

27/4/24

(அரசு சார்புச் செயலாளர்)

அரசு செயலாளருக்காக

Padasalai.Net